தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.142/ந/2024

நாள்.06.12.2024

| | | |
|---|---|---|
| திரு.பொ.சௌந்திரராஜன்,<br>நெகமம், கோயம்புத்தூர் மாவட்டம் | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையாளர்,<br>பொள்ளாசி நகராட்சி, பொள்ளாச்சி,<br>கோயம்புத்தூர் மாவட்டம் | – | எதிர்மனுதாரர் |

கோயம்புத்தூர் மாவட்டம், நெகமம், செங்குட்டுப்பாளையம், ஆனந்தி கார்டன், கதவு எண்.12 என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.பொ.சௌந்திரராஜன் என்பவரின் 31.12.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.01.2023 அன்று பெறப்பட்டு, 142/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கோயம்புத்தூர் மாவட்டம், நெகமம், செங்குட்டுப்பாளையம், ஆனந்தி கார்டன், கதவு எண்.12 என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.பொ.சௌந்திரராஜன் என்பவர் தனது 31.12.2022 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

நான் பொள்ளாச்சி நகராட்சியில் 18.08.1987 முதல் 17.09.1993 முடிய அலுவலக உதவியாளராக பணி புரிந்து, பணி உயர்வில் மேட்டுப்பாளையம், பழநி நகராட்சிக்கு சென்று மீண்டும் பொள்ளாச்சி நகராட்சியில் இளநிலை உதவியாளர் பணியில் 1998ம் வருடம் சேர்ந்து 31.01.2015–ல் ஒய்வு பெற்றேன். ஒய்வு பெற்ற போது, நான் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த காலத்திற்கு உள்ள

சேமநலநிதி மற்றும் சிறப்பு சேமநல நிதி மற்றும் ஈட்டிய விடுப்பு கணக்கீடு செய்யப்படவில்லை.இது குறித்து தங்களுக்கு விண்ணப்பம் அனுப்பி இருந்தேன்.அதற்கு தங்கள் கடித எண்.775/ந/2022–1 நாள்.01.09.2022–ன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி ஈட்டிய விடுப்பு பொருள் குறித்து அதற்கான எழுத்தர் அவர்களால் நான் பணியில் சேர்ந்த 17.08.1987 முதல் திருத்திய ஈட்டிய விடுப்பு கணக்கீடு செய்யப்பட்டு அதற்கான தொகை வழங்கப்பட்டது. ஆனால் சேமநல நிதி கவனிக்கும் எழுத்தர் கீழ்கண்ட தவறான தகவலை தங்களுக்கு அளித்துள்ளார்.

1) கடித எண்.44/2025/அ2 நாள் 2015–ன்படி சேமநல நிதி பதிவேட்டில் எனது பெயரில் சேமநலநிதி கணக்கில் இருப்பில் இல்லாததால், நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. ஒரு ஊழியர் வேறு நகராட்சிக்கு மாற்றம் செய்யப்பட்டால் அந்த ஊழியரின் சேமநல நிதி தொகை மாற்றப்பட்ட நகராட்சிக்கு மாற்றம் செய்யப்பட்டு இருக்க வேண்டும். அல்லது நகராட்சியில் இருக்க வேண்டும். இல்லையென்றால் கையாடல் செய்யப்பட்டு இருக்க வேண்டும்.
2) நான் பொள்ளாச்சி நகராட்சியில் எனது சேமநல நிதி இருப்பில் உள்ளதற்கு ஆதாரமாக பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் அவர்களது சேமநல நிதி இருப்பு ஸ்டேட்மெண்ட்–ஐ 4.9.2015 கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன். அதன் பிறகு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களுக்கு இது குறித்து விண்ணப்பம் செய்தேன். நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்கள் பொள்ளாச்சி நகராட்சிக்கு அனுப்பிவைத்து உரிய காலக்கெடுவுக்குள் அனுப்பி வைக்க தெரிவித்தும் இதுவரை பதில் அளிக்கவில்லை. இதில் முறைகேடு நடந்துள்ளது.
3) என்னை விட பணியில் இளையவர்களுக்கு சிறப்பு சேமநல நிதி தொகை முழு தொகை உள்ளதுபோல் எனக்கு மட்டும் ஏன் குறைவாக உள்ள காரணம் தெரிவிக்கவில்லை.
4) தங்களுக்கு அனுப்பி உள்ள கடிதத்தில் 2003–04–ல் இருந்து பதிவு செய்யப்பட்டு கணக்குகள் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. அப்படியென்றால் எனக்கு 2019–10ம் ஆண்டு முதல்தான் சேமநல நிதி பதிவேடு உள்ளது என அதற்கு முந்தைய பதிவேடுகள் இல்லை என்று தெரிவித்து பொள்ளாச்சி நகராட்சி கடிதத்தில் பதில் தெரிவித்தது ஏன் ? மேலும் அதே கடிதத்தில் பத்தி எண்.5ல் 2012 மற்றும் 2015ம் ஆண்டு பதிவேடுகள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டது. ஏன் ? கடிதத்தில் 2015ம் ஆண்டுக்கான பதிவேடு இல்லை என்றால் முறைகேட்டை மறைப்பதற்காக கொடுக்கப்பட்ட பதில் என்பது என்று தெரிகிறது.
5) எனக்கு வழங்கப்பட்ட சேமநலநிதி ஸ்டேட்மெண்ட்டில் 5, 6–வது ஊதிய குழு நிலுவை தொகைகள் பதிவு செய்யப்படவில்லை. திரு.போல்சன், இளநிலை உதவியாளர் அவர்களுக்கு 6–வது ஊதிய குழு நிலுவை தொகை செய்யப்படவில்லை.

எனவே பொள்ளாச்சி நகராட்சியில் பதிவேடுகள் சரியாக பராமரிக்காமல் ஓய்வு பெற்ற பல ஊழியர்களுக்கு நிலுவை தொகை வழங்காமல் முறைகேடுகள் நடைபெற்றதாக தெரிய வருகிறது. எனவே இதனை பரிசீலனை செய்து முறைகேட்டை தடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

2) மனுதாரரின் புகார் தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 31.01.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் அவரது அறிக்கை கோரப்பட்டது.

3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் தனது 31.03.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் அவர்கள் கடிதத்தில் திரு.பொ.சௌந்திரராஜன் பொள்ளாச்சி நகராட்சி முன்னாள் வருவாய் உதவியாளர்(ஓய்வு) அவர்கள் 17.08.1987 அன்று பணியில் சேர்ந்துள்ளார் எனவும், அலுவலக உதவியாளராக 17.09.1993 வரை பொள்ளாச்சி நகராட்சியில் பணியாற்றி உள்ளார் எனவும் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் சேமநலநிதித்தொகை பொள்ளாச்சி நகராட்சியில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வந்தது எனவும், 22.09.1993 முதல் 10.07.1995 வரை மேட்டுப்பாளையம் நகராட்சியில் இளநிலை உதவியாளராகவும், 12.07.1995 முதல் 15.07.1998 வரை பழனி நகராட்சியிலும், 22.07.1998 முதல் 02.11.1999 வரை பொள்ளாச்சி நகராட்சியிலும் இளநிலை உதவியாளராக பணியாற்றி 03.11.1999 முதல் பொள்ளாச்சி நகராட்சியில் Grade-I வருவாய் உதவியாளராக பரஸ்பர மாறுதல் பெற்று பணிபுரிந்து வந்துள்ளார் எனவும், 06.07.2000 முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு 11.05.2001 முதல் 31.12.2004 வரை அலுவலக உதவியாளராக பதவியிறக்கம் செய்யப்பட்டு மீண்டும் 01.01.2005 முதல் வருவாய் உதவியாளராக பணியாற்றி 31.01.2015 அன்று பொள்ளாச்சி நகராட்சியில் ஓய்வு பெற்றுள்ளார் என பொள்ளாச்சி நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சேமநலநிதித்தொகை, பழனி நகராட்சியில் இருந்து பொள்ளாச்சி நகராட்சிக்கு வரப்பெற்ற தொகை மற்றும் 6–வது ஊதியக்குழு நிலுவைத்தொகை 2003–2004 சேமநலநிதி பதிவேட்டில் பக்கம் எண்.10ல் வரிசை எண்.3 சேமநலநிதி கணக்கு எண்.1747 ஆரம்ப இருப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், தனியர் அவர்கள் 2014–2015ம் ஆண்டில் (1) செ.சீ.எண்.76 நாள் 09.07.2014–ல் ரூ.40,000/– கடன் தொகையாக பெற்றுள்ளார். (2) செ.சீ.எண்.190 நாள்.10.12.2014–ல் ரூ.70,000/– 90% தொகையாக பெற்றுள்ளார். (3) செ.சீ.எண்.239 நாள்.30.01.2015–ல் ரூ.24,946/– ஓய்வு பெற்ற நாளன்று காசோலையாக பெற்றுள்ளார். (4) செ.சீ.எண்.252 நாள் 19.02.2015–ல் ரூ.7,335/– ஊதியத்தில் பிடித்தம் செய்ய ஜனவரி 2015ம் மாதம் தொகையாக பெற்றுள்ளார் என பொள்ளாச்சி நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திரு.பொ.சௌந்திரராஜன் அவர்கள் ஓய்வு பெற்ற அன்று கூடுதலாக ரூ.36,000/– வழங்கப்பட்டு விட்டது எனவும், வழங்கப்பட்ட தொகையானது சிறப்பு சேமநலநிதித்தொகை ரூ.760/– மற்றும் வட்டித்தொகை ரூ.5375/– பங்குத்தொகை ரூ.10,000/– பொங்கல் ஊக்கத்தொகை ரூ.3000/– ஆக மொத்தம் ரூ.19.135/– – 2017–2018 ஆம் ஆண்டில் 22.02.2018–ல் சரிகட்டப்பட்டது எனவும், மீதம் செலுத்த வேண்டி தொகை ரூ.16,865/– அன்னாரது ஈட்டிய விடுப்புக்கான ஊதிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு சரிகட்டப்பட்டுள்ளது என பொள்ளாச்சி நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்பொழுது தனியரது சேமநலநிதி (PF) கணக்கில் ரூ.6770/– இருப்பில் உள்ளது எனவும், 2011–2012ஆம் ஆண்டு முதல் 2014–2015 வரையிலான சேமநலநிதி வட்டி தொகைக்கான முன்மொழிவு இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்து வரப்பெற்ற பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் இருவரையும் 22.10.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு 19.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.பொ.சௌந்திரராஜன்22.10.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

எனக்கு பொள்ளாச்சி நகராட்சியில் இருந்து 1987ம் ஆண்டு முதல் 1993ம் ஆண்டு வரை அலுவலக உதவியாளராக பணிபுரிந்த காலத்திற்கு உண்டான சிறப்பு சேமநலநிதி வட்டியுடன் வழங்கப்பட வேண்டும். சேமநலநிதி தொகை வட்டியுடன் வழங்கப்பட வேண்டும். 1988ம் ஆண்டு 5–ம் ஊதியக்குழு நிலுவை தொகை வட்டியுடன் வழங்கப்பட வேண்டும். 1996ம் ஆண்டு 6–ம் ஊதியக்குழு நிலுவை தொகை வட்டியுடன் வழங்கப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

6. பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் தனது 15.10.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திரு.பொ.சௌந்திரராஜன், வருவாய் உதவியாளர் (பணி ஓய்வு) என்பவரின் விண்ணப்பத்தில் வருவாய்/இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிபுரிந்தவர்களை தேர்வு நிலை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். அன்னார் கீழ்காணும் விபரப்படி நகராட்சிகளில் பணிபுரிந்து 31.01.2015 அன்று வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றுள்ளார்.

| வரிசை எண். | பதவி | பணிபுரிந்த நாட்கள் விபரம் | பணிபுரிந்த மொத்த காலம் |
|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | 17.08.1987 முதல் 17.09.1993 வரை | 6 வருடம் 1 மாதம் |
| 2. | இளநிலை உதவியாளர்/வருவாய் உதவியாளர் | 22.09.1993 முதல் 05.07.2000 வரை | 6 வருடம் 8 மாதம் 13 நாட்கள் |
| 3. | அலுவலக உதவியாளராக பதவி இறக்கம் செய்தது | 11.05.2001 முதல் 31.12.2004 வரை | 3 வருடம் 7 மாதம் 20 நாட்கள் |
| 4. | வருவாய் உதவியாளர் | 01.01.2005 முதல் 31.01.2015 வரை | 10 வருடம் 30 நாட்கள் |

இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 6 ஆண்டுக்கு மேல் பணிபுரிந்த நிலையில் அலுவலக உதவியாளராக பதவியிறக்கம் செய்யப்பட்டதாலும், அதன் பின்பு 10 ஆண்டுகள் 30 நாட்கள்

வருவாய் உதவியாளராக தொடர்ந்து பணிபுரிந்த நிலையில், மேற்குறிப்பிட்டவாறு சம்பளமில்லா விடுப்பு காலமாக அனுமதிக்கப்பட்ட 44 நாட்களை கழிக்கும் நிலையில் 10 ஆண்டுகள் பூர்த்தி அடையாததால் தேர்வு நிலை வழங்க இயலாது குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் தெளிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தற்போது அரசாணை நிலை எண்.68, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தம் துறை நாள் 23.01.1986–ன்படி தேர்வு நிலை வழங்குவது குறித்து வரிசை எண்.3(10)ல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

" The period of ten years in a post will be reckoned from the date of regular appointment. But wil exclude periods of reversion, leave other than extraordinary leave without allowance without medical certificate should be taken into account while completing the 10/20 years period"

அதன்படி, அன்னார் 22.09.1993 முதல் இளநிலை/வருவாய் உதவியாளர் (சமமான வகுப்பு) பணியிடத்தில் பணிபுரிந்துள்ள தகுதியான காலம் கீழ்காணுமாறு:–

| வரிசை எண். | பதவி | பணிபுரிந்த நாட்கள் விபரம் | பணிபுரிந்த மொத்த காலம் |
|---|---|---|---|
| 1. | இளநிலை உதவியாளர்/வருவாய் உதவியாளர் | 22.09.1993 முதல் 05.07.2000 வரை | 6 வருடம் 8 மாதம் 13 நாட்கள் |
| 2. | வருவாய் உதவியாளர் | 01.01.2005 முதல் 19.07.2005 வரை | 06 மாதம் 18 நாட்கள் |
| 3. | | 02.09.2005 முதல் 31.01.2015 வரை | 09 வருடம் 04 மாதம் 29 நாட்கள் |
| | | மொத்த தகுதி காலம் | 16 வருடம் 8 மாதம் |

மேற்காணும் பட்டியலில், குறிப்பிட்டுள்ளபடி, இளநிலை உதவியாளர்/வருவாய் உதவியாளர் (சமமான வகுப்பு) பணியிடத்தில் 16 வருடம் 8 மாதம் பணிபுரிந்துள்ளார்.இவற்றில் 10ஆண்டுகள் 08.07.2008 அன்று முடிவடைகிறது.எனவே 09.07.2008 முதல் தேர்வுநிலை வழங்கிட முடிவு செய்யப்பட்டு, ஊதியம் மறு நிர்ணயம் செய்ய செயல்முறைகளில் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், திரு.சௌந்திரராஜன், வருவாய் உதவியாளர்(ஓய்வு) பணியிலிருந்து ஓய்வு பெற்று, தற்போது ஓய்வூதியம் பெற்று வருவதால், மேற்படி தேர்வுநிலை உத்தரவினை நகராட்சி உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறையின் ஒப்புதல் பெற்று இவ்வுத்தரவு நடைமுறைப்படுத்தப்படும் என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. அத்துடன் ஊதியம் மறுநிர்ணயம் செய்தபின், நிலுவைத்தொகை வழங்கவும், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறைக்கு அனுப்பி, ஓய்வூதிய பலன்களின் மறுநிர்ணயம் செய்யப்படும் என்ற விபரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

7. நகராட்சி ஆணையாளர்22.10.2024 அன்று நேரடியாக விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் திரு.பொ.சௌந்திரராஜன், வருவாய் உதவியாளர்(பணி ஓய்வு) அவர்கள் முறைமன்ற நடுவர் முன்பு 1987 முதல் 1993 வரையிலான காலகட்டத்தில் கொடுக்க வேண்டிய வைப்பு நிதி தொகை, 5–வது மற்றும் 6–வது நிதி ஆணையத்தின் நிலுவை தொகை மற்றும் இதர ஓய்வூதிய பலன்கள் பொள்ளாச்சி நகராட்சியால் வழங்கப்படவில்லை என முறையிட்டுள்ளார்.

மேற்படி கோரிக்கைகள் குறித்த மனு கோப்பில் இடம் பெறவில்லை என்றும், மனுதாரருக்கு தேர்வு நிலை அனுமதிக்க கோரிய மனு இருந்ததால் அதனை பரிசீலித்து பொள்ளாச்சி நகராட்சியின் செயல்முறைகள் ந.க.எண்.985/2022/சி1, நாள்.15.10.2024–ன் படி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், அவ்வுத்திரவு உள்ளாட்சி தணிக்கைத்துறையில் ஒப்புதல் பெற்று நடைமுறைப்படுத்தப்படும் எனவும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும், மனுதாரர் மாண்புமிகு முறைமன்ற நடுவர் முன்பு வைத்த கோரிக்கைகள் அனைத்தும் ஆறு மாத காலத்திற்குள் சம்மந்தப்பட்ட நகராட்சிகளிடம் விவரங்கள் பெற்று மனுதாரருக்கு தகுதி இருப்பின், அனைத்து கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு பணப்பலன்கள் வழங்கப்படும், தகுதியில்லாத நேர்வுகளுகது உரிய பதில் மனுதாரருக்கு அளிக்கப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 15.10.2024 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்களை எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன் என சமர்ப்பித்துள்ளார்.

8) மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அறிக்கை, பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் வாக்குமூலம், அறிக்கை மற்றும் ஆவணங்கள், ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனக்கு பொள்ளாச்சி நகராட்சியில் இருந்து 1987ம் ஆண்டு முதல் 1993ம் ஆண்டு வரை அலுவலக உதவியாளராக பணிபுரிந்து காலத்திதற்கு உண்டான சிறப்பு சேமநலநிதி வட்டியுடன் வழங்கப்பட வேண்டும், சேமநலநிதி தொகை வட்டியுடன் வழங்கப்பட வேண்டும் என்றும் 1988ம் ஆண்டு 5–ம் ஊதியக்குழு நிலுவை தொகை வட்டியுடன் வழங்கப்பட வேண்டும் எனவும் 1996ம் ஆண்டு 6–ம் உதியக்குழு நிலுவை தொகை வட்டியுடன் வழங்கப்பட வேண்டும் என இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டுள்ளார்.

நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் மனுதாரர் இளநிலை உதவியாளர்/வருவாய் உதவியாளர் (சமமான வகுப்பு) பணியிடத்தில் 16 வருடம் 8 மாதம் பணிபுரிந்துள்ளார்

என்றும்,இவற்றில் 10ஆண்டுகள் 08.07.2008 அன்று முடிவடைகிறது எனவும், எனவே 09.07.2008 முதல் தேர்வுநிலை வழங்கிட முடிவு செய்யப்பட்டு, ஊதியம் மறு நிர்ணயம் செய்ய செயல்முறைகளில் உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், மேலும், திரு.சௌந்திரராஜன், வருவாய் உதவியாளர்(ஓய்வு) பணியிலிருந்து ஓய்வு பெற்று, தற்போது ஓய்வூதியம் பெற்று வருவதால், மேற்படி தேர்வுநிலை உத்தரவினை நகராட்சி உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறையின் ஒப்புதல் பெற்று இவ்வுத்தரவு நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவித்துள்ளார்.

பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் பரிசீலனை செய்து, ஆறுமாத காலத்திற்குள் சம்மந்தப்பட்ட நகராட்சி அலுவலகங்களில் விபரங்கள் பெற்று உள்ளாட்சி தணிக்கை துறையின் ஒப்புதல் பெற்று அவரது பணிக்காலத்தினை பொறுத்து, அவருக்கு சேரவேண்டிய பணப்பலன்களை உரிய சட்ட விதிகளுக்குட்பட்டு காலதாமதம் இல்லாமல் வழங்கிட பொள்ளாச்சி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 06–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.பொ.சௌந்திரராஜன்,
எண்.12, ஆனந்தி கார்டன்,
மூட்டாம்பாளையம்,
செங்குட்டுப்பாளையம்.(அஞ்சல்)
நெகமம் – 642 120.
கோயம்புத்தூர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
பொள்ளாச்சி நகராட்சி,
பொள்ளாச்சி.
கோயம்புத்தூர் மாவட்டம்.

.3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல். மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)